**செய்தி வெளியீடு எண்:513** **நாள் : 11.10.2014**

**பத்திரிக்கைச் செய்தி**

**<u>இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை – 106.</u>**

2014 – 2015 ஆம் கல்வியாண்டிற்குரிய பி.எஸ்.எம்.எஸ் / பி.ஏ.எம்.எஸ் / பி.யு.எம்.எஸ் / பி.என்.ஒய்.எஸ் / பி.எச்.எம்.எஸ் மருத்துவ பட்டபடிப்பிற்களுக்கான சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர முறை கலந்தாய்வு சென்னை, அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனை வளாகத்திலுள்ள தேர்வுக்குழு அலுவலகத்தில் கீழ்க்கண்ட கலந்தாய்வு அட்டவணைப்படி நடைபெறும். தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே கலந்தாய்வு தகவல் / அழைப்புக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே குறுந்தகவல் செய்தி அனுப்பப்படும். மேற்படி தகவல் / அழைப்புக்கடிதம் கிடைக்கப்பெறாதோர், வலைதளம் “www.tnhealth.org” –ல் தங்களது விண்ணப்ப பதிவு எண்ணை (A.R.No.) குறிப்பிட்டு தங்களுக்குரிய தகவல் / அழைப்புக்கடிதத்தை பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். மேலும், விண்ணப்பதாரர்கள் அவரவர்க்குரிய கட் ஆப் மதிப்பெண்ணுக்கு ஏற்றவாறு உரிய கலந்தாய்வு நாளில் தங்களது அனைத்து அசல் சான்றிதழ்களுடனும் அல்லது தற்சமயம் படித்து வரும் கல்லூரியிலிருந்து பெற்ற ஆளறிச்சான்றிதழுடனும் (Bonafide certificate) , தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து, 10.10.2014 – அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ , சென்னையில் மாற்றத்தக்க,

“ Director of Indian Medicine and Homoeopathy, Chennai–106 ” என்ற பெயரில் , ரூ.5,500/– (ரூபாய் ஐந்தாயிரத்து ஐநூறு மட்டும்) –க்கான கேட்பு வரைவோலையுடனும் கலந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தயவு செய்து “www.tnhealth.org ” என்ற வலைதளத்தை தொடர்பு கொள்ளலாம்.

கலந்தாய்வு அட்டவணை.

2014 – 2015 கல்வியாண்டு

| தேதி | கிழமை | முற்பகல்<br>காலை 7.00 மணி முதல் | பிற்பகல்<br>பிற்பகல் 1.00 மணி முதல் |
|---|---|---|---|
| 17–10–2014 | வெள்ளி | **அனைத்து சிறப்பு வகுப்பினர்**<br>**&**<br>**கட் ஆப் மதிப்பெண்**<br>**198.00** முதல் **193.25 வரை**<br>**தரவரிசை எண்: 1** முதல் **329 வரை** | **கட் ஆப் மதிப்பெண்**<br>**193.00** முதல் **187.25 வரை**<br>**தரவரிசை எண் 330** முதல் **834 வரை** |
| 18–10–2014 | சனி | **கட் ஆப் மதிப்பெண்**<br>**187.00** முதல் **181.25 வரை**<br>**தரவரிசை எண் : 835** முதல் **1329 வரை** | **கட் ஆப் மதிப்பெண்**<br>**181.00** முதல் **173.25 வரை**<br>**தரவரிசை எண் : 1330** முதல் **1852 வரை** |
| 19–10–2014 | ஞாயிறு | **கட் ஆப் மதிப்பெண்**<br>**173.00** முதல் **164.25 வரை**<br>**தரவரிசை எண்:1853** முதல் **2342 வரை** | **கட் ஆப் மதிப்பெண்**<br>**164.00** முதல் **151.25 வரை**<br>**தரவரிசை எண் : 2343** முதல் **2855 வரை** |
| 20–10–2014 | திங்கள் | **கட் ஆப் மதிப்பெண்**<br>**151.00** முதல் **132.25 வரை**<br>**தரவரிசை எண் : 2856**<br>**வரை** முதல் **3342** | **கட் ஆப் மதிப்பெண்**<br>**132.00** முதல் **100.25 வரை**<br>**தரவரிசை எண் : 3343** முதல் **3665 வரை** |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**